**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No. 183/2017**
**வழக்கு சாட்சி PW–5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பத்மநாபபிள்ளை | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கோலப்பபிள்ளை | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | தச்சநல்லூர் | வயது | : | 55 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 10.06.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :–**

நான் தச்சநல்லூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2016 வருடம் கடையநல்லூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக இருந்த போது 09.06.2016 ம் தேதி மாலை 18.00 மணிக்கு கடையநல்லூர் காவல் நிலைய குற்ற எண்.200/2016 வழக்கு கோப்பினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடமான கடையநல்லூர் அட்டகுளம் பக்கம் வைத்து சாட்சிகள் பழனி, மாரியப்பன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அசாஆ.2** ஆகும். அந்த வரைபடம் **அசாஆ.3** ஆகும்.

பின்னர் சாட்சிகள் பழனி, மாரியப்பன், ஜெயின் தாமஸ், கணேசன், சண்முகத்தாய், அர்சுணன், உஷா, உதவி ஆய்வாளர் சில்வியாஜாஸ்மின் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 10.06.2016 ம் தேதி மாலை 7.00 மணிக்கு கடையநல்லூர் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து பஞ்சாயத்தார் முன்னிலையில்

இறந்துபோன அபிஜித் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அசாஆ. 4** ஆகும். பின்னர் இறப்பிற்கான காரணம் அறியும் பொருட்டு பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக காவலர் மாரியப்பன் மூலமாக மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன்.

பின்னர் 10.06.2016 ம் தேதி 16.30 மணிக்கு எதிரியை காவல் நிலையத்தின் முன்பு வைத்து கைது செய்து தக்க பிணையில் விடுவித்தேன்.

பின்னர் 13.06.2016 ம் தேதி வழக்கில் சம்மந்தப்பட்ட TN 72 N 1248 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தை விபத்து ஆய்வு செய்யவேண்டி மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து ஆய்வுக்கு அனுப்பி வைத்தேன். 24.06.2016 ம் தேதி வழக்கில் சம்மந்தப்பட்ட TN 72 AC 1161 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை விபத்து ஆய்வு செய்யவேண்டி மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து ஆய்வுக்கு அனுப்பி வைத்தேன். 30.08.2016 ம் தேதி வழக்கில் சம்மந்தப்பட்ட KL 25 H 2445 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை விபத்து ஆய்வு செய்யவேண்டி மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து ஆய்வுக்கு அனுப்பி வைத்தேன்.

30.09.2016 ம் தேதி வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர்கள் பெரியத்துரை, சசி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றேன். அது **அசாஆ.5, அசாஆ.6, அசாஆ.7** ஆகும். எதிரிக்கு பணி நியமனம் செய்த ஹரிகரசுப்பிரமணியன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு

செய்து பணி நியமன சான்று பெற்றேன். (பணி நியமன சான்று நீதிமன்றத்திற்கு அனுப்பப்படவில்லை. )

வழக்கில் காயம்பட்ட கெவின்தாமஸ், கணேசன், சண்முகத்தாய், முகிலாதேவி ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கார்த்திக் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். அந்த காயச்சான்றுகள் **அசாஆ.8, அசாஆ.9, அசாஆ.10, அசாஆ.11** ஆகும்.

பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் கந்தசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்று பெற்றேன். அந்த பிரேத பரிசோதனை சான்று **அசாஆ.12** ஆகும். பின்னர் காவலர் மாரியப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அத்துடன் எனது விசாரணையை முடித்து சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், விசாரணையின் அடிப்படையிலும் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 279, 337, 304(A) IPC வின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**(ப.சா.1 விசாரிக்கப்படாதனால் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )**

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.19 13:14:07 +0530